பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 119

செவ்வாய்க்கிழமை
25 மார்ச் 2025

பங்குனி 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## ஸ்டார்லிங் ஒப்பந்தம் நிறுத்தம்!

கொழும்பு, மார்ச் 25
உலகப் பணக்காரரும், தொழிலதிபருமான எலான் மஸ்க்கின் 'ஸ்டார்லிங்' நிறுவனத்தின் இணைய சேவைகளை 11

## கருணா உட்பட
# போர்க் குற்றவாளிகளுக்கு பிரிட்டன் பயணத் தடை

கொழும்பு, மார்ச் 25
இலங்கையில் மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்களைப் புரிந்தனர் என்ற குற்றச்சாட்டில், முன்னாள் இராணுவத் தளபதிகள், கடற்படை தளபதி மற்றும் கருணா ஆகியோருக்கு எதிராக பிரிட்டன் பயணத் தடைகளை அறிவித்துள்ளது. 11

## மன்னார், பூநகரிக்கு வேட்புமனுக்கள் ஏற்பு

மன்னார், மார்ச் 25
மன்னார், பூநகரி மற்றும் தெஹியத்தகண்டிய ஆகிய மூன்று பிரதேசசபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் பணி நேற்றுமுதல் ஆரம்பித்துள்ளது.
வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் எதிர்வரும் 27 ஆம் திகதியுடன் முடிவடையும் என்றும் அறிவிக்கப் 11

## ஒருகிலோ அரிசியால் பறந்தது ஒரு லட்சம் ரூபா

யாழ்ப்பாணம், மார்ச் 25
யாழ்ப்பாணத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றுக்கு, கட்டுப்பாட்டு விலையை மீறிய வகையில் விற்பனை செய்த ஒரு கிலோ அரிசிக்காக ஒரு லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. 11

## வவுனியா கற்குழியில் நேற்றுச் சுற்றிவளைப்பு

வவுனியா, மார்ச் 25
வவுனியா கற்குழி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் நேற்றுமாலை பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து விசேட சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.
நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுத் தலைமறைவாக உள்ளவர்கள், போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுவோர் ஆகியோரைக் கைதுசெய்யும் நோக்குடன் 11

## ஓட்டோ மோதியதில் ஒருவர் சாவு

யாழ்., மார்ச் 25
யாழ்ப்பாணம் நாவற்குழியில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட விபத்தில் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்தார். அ.றிக்மன் டெனிஸ் (வயது - 44) 11



## உள்ளூராட்சித் தேர்தலிலும்
## வடக்கு, கிழக்கில் வெற்றி உறுதியே!
### ரில்வின் சில்வா நம்பிக்கை

கொழும்பு, மார்ச் 25
வடக்கு, கிழக்கு மக்களின் மனநிலை மாறாது. ஆதலால், உள்ளூராட்சித் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தியையே அவர் 11

## தேர்தல் விதிகளுக்கு முரணாக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்!
### வேலணையில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 25
வேலணை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், தேர்தல் சட்டத்துக்கு முரணான வகையில், வேட்பாளர்களின் பங்கேற்புடன் நேற்று நடைபெற்றுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
வேலணைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி தலைமையில் 11

## பெண்கள், சிறுவர்களை தாம் தாக்கவில்லையாம்
### மறுக்கின்றது நெல்லியடிப் பொலிஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 25
யாழ்ப்பாணம் நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், பொதுமக்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியதாக முன்வைக்கப்பட்ட குற்றச் சாட்டுகளை 11



## கம்மன்பில விடுதலை!

கொழும்பு, மார்ச் 25
அவுஸ்திரேலிய பிரஜை ஒருவருக்குச் சொந்தமான பங்குகளை, போலி ஆவணத்தைப் 11

### இராணுவத்தை
## திஸ்ஸ விகாரையிலிருந்து வெளியேற்றியவர்கள் யார்?
» 11




'பேராசை பெருநட்டம் எண்டது கனபேருக்கு இப்பவும் விளங்குதில்லை கண்டியளோ'

## நிதி அறிவு இல்லாதோரே பிரமிட் மோசடிக்குப் பலி!
» 03

## இணைய மோசடிகள் யாழில் அதிகரிப்பு!
» 10

## சிங்களக் குடும்பங்களையும் வடக்கில் மீளக்குடியேற்றுக!
### வீரசேகர வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 25
1983ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிங்களக் குடும்பங்கள் வாழ்ந்தன. அவர்களின் காணிகளுக்கு என்ன நடந்தது? எனவே, அவர்களை மீள்குடியமர்த்தி அவர்களுக்குரிய காணிகளை வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்படவேண் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25.03.2025 செவ்வாய்க்கிழமை

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 24.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4027 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 23 38 58 78 |
| விசேட எழுத்து | P |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 24.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1094 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 28 30 43 45 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 24.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0053 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 0 5 3 3 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 24.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2133 |
| ஆங்கில எழுத்து | N |
| சுப்பர் இலக்கம் | 03 |
| வெற்றி இலக்கங்கள் | 13 19 68 71 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 24.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5785 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 8 3 7 3 8 5 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 24.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1815 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 19 21 28 81 |
| விசேட எழுத்து | I |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 24.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0360 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 7 3 8 5 |

# உள்ளூராட்சிசபைத் தேர்தல் இதுவரை 6 முறைப்பாடுகள்

கொழும்பு, மார்ச் 25

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக நேற்றுமுன்தினம்வரை 6 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. நாடளாவிய ரீதியில் 6 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பொலிஸ் பிரிவுகளின் கீழ் துரிதமாக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸ் தலைமையகம் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-33-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 24.03.2025 | திங்கட்கிழமை | 0493 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| L | 8 8 0 7 4 8 | |

| Super Ball | | | |
|---|---|---|---|
| திகதி | 24.03.2025 | தினம் | திங்கட்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| 2759 | S | 20 37 52 80 | |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 24.03.2025 | திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| T | 12 15 34 36 | 4920 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 24.03.2025 | திங்கட்கிழமை | |
| மீனம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 07 08 11 54 | 4471 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | 24.03.2025 | தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| W | 09 | 49 56 59 74 | 1935 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 24.03.2025 | திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| K | 07 55 71 74 | 2585 |

| JAYODA | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 24.03.2025 | திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Z | 48 51 60 63 | 2114 |

## த.ம.கூட்டணி காரைநகரில் அறிமுக கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

தமிழ் மக்கள் கூட்டணியின் காரைநகர் பிரதேசசபைக்கான வேட்பாளர் அறிமுகக் கூட்டமும், பரப்புரைக் கருத்தரங்கும் நேற்று நடைபெற்றன.

தமிழ் மக்கள் கூட்டணியின் மத்திய குழு உறுப்பினரும், யாழ்.மாநகர முன்னாள் மேயருமான சட்டத்தரணி வி.மணிவண்ணன் சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் வேட்பாளர்களும், ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர். (எ-125)



## அல்–ஜெஸீராவின் தாளத்துக்கு ஆடுகிறது அநுர அரசாங்கம்

### சாடுகின்றார் அஜித் பி பெரேரா



கொழும்பு, மார்ச் 25

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கான அல்-ஜெஸீராவின் நிகழ்ச்சி நிரலுக்காக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இலங்கை பாதுகாப்புப் படையினரை சர்வதேசத் திடம் காட்டிக்கொடுக்க முயற்சிக்கின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது-

இலங்கைப் பாதுகாப்புப் படைகளைக் குற்றவாளிகளாக சர்வதேசத்துக்குக் காண்பிக்கவே ரணில் விக்கிரமசிங்கவை அல்-.ஜெஸீரா இலக்குவைத்தது. விடுதலைப்புலிகளுக்காகவே இது நடைபெற்றது.

30 ஆண்டுகளாகக் கவனத்திற்கொள்ளப்படாதிருந்த பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை கண்ணீர்மல்க இந்த அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.

காலத்துக்குத் தேவையற்ற ஆனால் எதிர்காலத்தில் அச்சுறுத்தலாக அமையக்கூடியவற்றையே தற்போதைய அரசாங்கம் செய்கின்றது. விடுதலைப்புலிகள் அமைப்புக்குச் சாதகமாகச் செயற்பட்டு, நாட்டின் இராணுவத்தினரையும், போரில் உயிர்த்தியாகம் செய்த பாதுகாப்புப் படையினரையும் சர்வதேசத்தின் மத்தியில் காட்டிக்கொடுப்பதற்கான செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன-என்றார். (எ-33-இ)

## விபத்துக்குள்ளான விமானத்தில் கோளாறு இல்லை!

கொழும்பு, மார்ச் 25

சிலநாள்களுக்கு முன்னர் பயிற்சியின் போது விபத்துக்குள்ளான கே-8 விமானத்தில் இயந்திரக்கோளாறு எதுவும் ஏற்படவில்லை என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். பயிற்சிகளின்போது இவ்வாறான விபத்துக்கள் ஏற்படுவது உலகம் முழுவதும் உள்ள பொதுவான பிரச்சினை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொத்துஹெர ரம்புக்கனை அதிவேக நெடுஞ்சாலை ஆய்வுப் பயணத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (எ-இ)

## லலித், குகன் வழக்குக்கு கோத்தாவுக்கு அழைப்பு

கொழும்பு,மார்ச் 25

லலித், குகன் காணாமலாக்கப்பட்ட வழக்கில் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச எதிர்வரும் ஜுலை 30ஆம் திகதி யாழ்ப்பாண நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் திகதியிட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி சமூக செயற்பாட்டாளர்களான லலித் வீரராஜ், குகன் முருகானந்தம் ஆகியோர் யாழ்ப்பாணத்தில் வைத்து காணாமலாக்கப்பட்டிருந்தனர். இவர்கள் காணாமலாக்கப்பட்ட வழக்கில் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை சாட்சியாக இணைக்கவேண்டும் என்று கோரப்பட்டிருந்தது.

ஜனாதிபதியாகப் பதவி வகித்தபோது பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி கோத்தாபய ராஜபக்ச சாட்சியமளிக்க யாழ்ப்பாணம் வருவதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தார். தற்போது கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இல்லாத காரணத்தால் யாழ்ப்பாணம் வருவதில் எதுவித பிரச்சனையுமில்லை என வழக்கைத் தாக்கல் செய்த காணாமலாக்கப்பட்டோர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் ஜுலை 30ஆம் திகதி வழக்கை விசாரணைக்கு எடுப்பதற்குத் திகதியிட்டுள்ளது. (எ-33-6)



## ஊடகங்களின் அரசியல் மலையேறிவிட்டதாம்!

### ஜனாதிபதி தெரிவிப்பு

ஊடகங்கள் அரசியல் நடத்திய காலம் மலையேறிவிட்டது என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்தபோதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரசியலில் ஊடகங்கள் செல்வாக்குச் செலுத்தியிருந்தால் நான் ஜனாதிபதியாக வந்திருக்கவும் முடியாது. 159 தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டிருக்கவும் முடியாது. ஊடகங்கள் அரசியல் நடத்திய காலம் 2019 ஆம் ஆண்டுடன் முடிவடைந்துவிட்டது என்றார். (எ-33-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி அறிவு இல்லாதோரே பிரமிட் மோசடிக்குப் பலி

## இலங்கை மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு



**கொழும்பு, மார்ச் 25**

**பிரமிட் போன்ற மோசடிக்குள் சிக்கும் பெரும்பான்மையானவர்களுக்கு நிதி தொடர்பான கல்வியறிவு இல்லை என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.**

இலங்கை மத்திய வங்கியில் பதிவுசெய்யப்பட்ட வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் புதிய தொழில்நுட்ப சேவைகள் தொடர்பாகப் பொதுமக்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இணையத்தில் வெளியிடப்படும் விளம்பரங்களைப் பார்க்கிறோம். அவற்றில் சலுகைகள் காட்சிப்படுத்தப்படுகின்றன. இப்போது பல்வேறு விவசாய நடவடிக்கைகள் எனும் போர்வையில் பணம் திரட்டுவதற்காக விரிவாக விளம்பரம் செய்கிறார்கள். சட்டத்தில் உள்ள ஓட்டையைப் பயன்படுத்தி, முதலீடு என்ற போர்வையில் மோசடியாகப் பணத்தைப்பெற்று, பின்னர் அந்தப் பணத்தை பிரமிட் திட்டங்களிலோ அல்லது அங்கீகரிக்கப்படாத வைப்புத்தொகைகளிலோ வைப்பதன் மூலம் பணம் மோசடிசெய்யப்படும் நிலைமை உள்ளது. இவற்றைத் தடுப்பதற்கு மக்களின் நிதி தொடர்பான கல்வியறிவை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன-என்றார். (எ-25 -இ)

# வேடுவரை நையாண்டி செய்து யூரியூப்பில் காணொலிப் பதிவு!

## சி.ஐ.டி.யில் முறைப்பாடு

தமது சமூகத்தை நையாண்டி செய்யும் வகையில் யூரியூப் சமூகவலைத்தளத்தில் பதிவேற்றப்பட்ட காணொலியைத் தடைசெய்யவேண்டும் என்று வேடுவத்தலைவர் உருவருகே வன்னிலா அத்தோ குற்றவியல் திணைக்களத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளார்.

டினோ கொரியா என்பவர் அண்மையில் தனது யூரியூப் சனலில் வேடர்களை நையாண்டி செய்வதுபோல் காணொலி ஒன்றை வெளியிட்டிருந்தார். அந்தக் காணொலி தமது சமுதாயத்தை இழிவுபடுத்துகின்றது என்று அவர் முறையிட்டுள்ளார். (எ-33-6)

# பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம்

பொலிஸ் அதிகாரிகள் சிலருக்கு உடன்நடைமுறைக்கு வரும்வகையில் இடமாற்றங்கள், புதிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியுடன் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களுக்குப் பொறுப்பாக இருந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் டி.எம்.யு.எம். திசாநாயக்க, விசேட பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். மட்டக்களப்பு மாவட்டத்துக்குப் பொறுப்பாக செயற்பட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் டபிள்யூ.ஏ.ஜே. விஷாந்த, பிரதமரின் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் இருவருக்குப் பிரதிபொலிஸ்மா அதிபர்களுக்கான பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (எ-25-இ)

# எம்.பி.க்கான ஓய்வூதியத்தை துறக்கும் ஜனாதிபதி அநுர!

கொழும்பு, மார்ச் 25

அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினராக இதுவரை பெற்றுவந்த ஓய்வூதியம் அடுத்த மாதம் முதல் நிறுத்தப்படும் என்று நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதி ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராக 5 ஆண்டுகள் நிறைவுசெய்திருந்தால் அவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஓய்வூதியத்துக்கும் அதேவேளை, ஜனாதிபதி ஓய்வூதியத்துக்கும் தகுதியானவர். இந்த இருவழி ஓய்வூதியங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பவில்லை என்று ஜனாதிபதி அநுரகுமார நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். இதுதொடர்பாக நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளார். (எ-33 -இ)



# சொத்து விவரம் கோரும் நீதிச்சேவை ஆணைக்குழு

கொழும்பு, மார்ச் 25


2024 ஆம் ஆண்டுக்குரிய அசையும், அசையா சொத்துக்களின் விவரங்களை சமர்ப்பிக்கவேண்டும் என்று நீதிச்சேவை ஆணைக்குழு நீதிச் சேவை உத்தியோகத்தர்களுக்கு சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது.

நீதிபதிகள், மஜிஸ்திரேட்கள் உட்பட நீதித்துறையில் கடமையாற்றும் அதிகாரிகள், பொதுச்சேவையிலிருந்து நீதித்துறைக்கு உள்வாங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் நீதிச்சேவை உத்தியோகத்தர்களின் துணைவர்கள் ஆகியோரின் சொத்து விவரங்களைச் சமர்ப்பிக்கவேண்டும் என்று நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் [illegible] ளார். (எ-41-6)

# இரட்டைக்கொலைக்கு ரூ. 50 லட்சம் ஒப்பந்தம்!

மாத்தறை - தேவேந்திரமுனை இரட்டைக் கொலைச்சம்பவம் 50 இலட்சம் ரூபா ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளமை பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்தக் கொலைக்காக இரண்டு துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கடந்த வெள்ளிக்கிழமை நடந்த இந்தக் கொலைச்சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட பெண் உட்பட 4 சந்தேக நபர்களும் எதிர்வரும் 29ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் வர்த்தக முரண்பாடு காரணமாக இந்தக் கொலைகள் நடந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. (எ-25-இ)




**மு**ள்ளில சிக்கின சீலையை, முள்ளும் குத்தாமல் சீலையும் கிழியாமல் எடுக்கிறதெண்டது பெரும்பாடுதான். அப்பிடி ஒரு நிலைமையில சிக்கி என்ன முடிவு எடுக்கிறதெண்டு தெரியாமல் சிறுவர்களைப் பாதுகாக்கிற பொறுப்பில இருக்கிற அதிகாரிமார் முழிக்கினம். கிட்டடியில கச்சேரியில சின்னப்பிள்ளயளைப் பாதுகாக்கிற சம்பந்தமா கூட்டமொண்டு நடந்தது. அதில சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருத்தர், தன்னட்ட வந்த ஒரு பிரச்சினையை எப்பிடித் தீர்க்கிறது எண்டு தெரியாமல், அங்க இருந்தவையிட்ட அட்வைஸ் கேட்டார். ஆனால் அங்க இருந்தவையாலையும் அந்தப் பிரச்சினைக்கு ஒரு வழி கண்டுபிடிக்கேலாமல் போட்டுது. பிரச்சினை இதுதான்.

ஒரு குடும்பத்தில தாயும், தகப்பனும் பிரிஞ்சிட்டினம். தாய் இன்னொரு ஆளைக் கலியாணம் கட்டிக்கொண்டு போக, தகப்பன் ஒரே குடிவெறி, வீட்டுப்பக்கமும் வாறேலை. இப்ப அவையின்ர 10 வயதுக்குட்பட்ட பொம்பிளைப்பிள்ளை ஆரோட வளருர எண்ட சிக்கல் வந்திட்டுது. தாய் இன்னொரு கலியாணம் செய்ததால, பொம்பிளைப் பிள்ளையை அவாவோட விடுறது அந்தப் பிள்ளைக்குப் பாதுகாப்பில்லை. அதைமாதிரி தகப்பனும் குடிச்சு வெறிச்சுக்கொண்டு வீடுவாசலையே எட்டிப்பார்க்காமல் திரியிறதால அவரை நம்பியும் அந்தப் பிள்ளையை வளர்க்க விடேலாது. அதால அப்பம்மாவிட்ட( தகப்பன்ர தாயிட்ட) அந்தப் பொம்பிளைப் பிள்ளையை வளர்க்கிற பொறுப்பைக் குடுத்திருக்கினம். அப்பம்மாவும் தன்ர பேர்த்தியை வடிவாத்தான் வளர்த்துகொண்டு வந்தவா. திடீரெண்டு ஒருநாள் பள்ளிக்கூடம் போன பிள்ளை வீட்ட வரேலை. தன்ர பேர்த்திக்கு என்ன நடந்திருக்கும் எண்டு பதறித் துடிச்ச அப்பம்மா, சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு விசயத்தைச் சொல்லியிருக்கிறா. அந்த உத்தியோகத்தரும் சின்ன டவுட்டில அந்தப் பிள்ளையின்ர தாயிட்ட 'உங்கட பிள்ளை பள்ளிக்கூடத்தால வீட்ட போகேலயாம். உங்களோடையோ இருக்கிறா?' எண்டு கேக்க, தாயும் ஓமெண்டிருக்கிறா.

'அவளுக்கு அப்பம்மாவோட இருக்க விருப்பமில்லையாம். என்னோடதான் இருக்கப்போறாளாம். அதுதான் பள்ளிக்கூடத்தால வரேக்க நான் போய் கூட்டிக்கொண்டு வந்தனான்' எண்டு சின்னவிசயம் மாதிரிச் சொல்லியிருக்கிறா. ஆனால் சட்டப்படி அப்பம்மாவோடதான் அந்தப் பிள்ளை வளரோணும். அது விளங்காமல் பிள்ளையை தாய் தன்னோட கூட்டிக்கொண்டு போனால், அது கடத்தல் கேஸுக்குள்ளதான் வரும். ஆனால் அந்தப் பிள்ளையும் 'நான் அம்மேவோட தான் இருக்கப்போறன்' எண்டு அடம்பிடிக்குதாம். இந்த விசயத்தில பிள்ளையின்ர விருப்பமும் முக்கியம். அந்தப் பிள்ளை விருப்பமில்லாமல் அப்பம்மாவோட இருந்தால், அது பிறகு கனக்கப் பிரச்சினையளைக் கொண்டந்திடும்.

பிள்ளைக்குப் பிடிச்ச இடம் எண்டு தாயோட வளர விட்டால், அங்கையும் அந்தப் பிள்ளைக்கு பாதுகாப்பு இருக்குமோ எண்டதும் சந்தேகம். ஏனெண்டால் கன இடங்களில, இப்பிடி ரண்டாம் தாரமா இன்னொரு ஆளைக்கட்டின தாயோட வளர்ந்த பிள்ளையள் பாலியல் துஷ்பிரயோகத்தில சிக்கி, சீரழிஞ்ச சம்பவங்கள் கனக்க நடந்திருக்கு. அப்பிடி ஒரு நிலைமை தாயோட வளருறதால இந்தப் பிள்ளைக்கு வந்தால், அது தங்கட பிழையால வந்ததெண்டு இன்னும் சிக்கலாப் போடுமெண்ட பயம், இந்த சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் மாருக்கு. அதால இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமலே அண்டைக்குக் கூட்டம் முடிஞ்சிருக்காம். இப்ப அந்தப் பிள்ளை தாயோடதான் இருக்குதாம். சில பிரச்சினையளுக்கு நாங்கள் தீர்வுகாண்றதை விடவும், அதின்ர பாட்டில விட்டால் தானாவே ஒரு வழி கிடைக்கலாம் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்புக் குறையும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்கவேண்டாம். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**இடபம்** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும் என்பதால், கையிருப்புகரையும். வாழ்க்கைத்துணை உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும். இளைய சகோதரவகையில் ஆதாயம் ஏற்படும்.

**மிதுனம்:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். கணவன் மனைவிக்கிடையே சிறு பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்

**கடகம்** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். சிலருக்கு திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. பிற்பகலுக்கு மேல் கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணை அனுசரணையாக நடந்துகொள்வார்.

**கன்னி:** எதிலும் அவசரமில்லாமல் செயற்பட வேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரையும்.

**துலாம்:** அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம்தேவை. தாய்வழி உறவுகளுக்காக செலவுசெய்யவேண்டி இருக்கும் கணவன் மனைவிக்கிடையே வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும்என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**விருச்சிகம்** உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்குப் பக்கபலமாக இருப்பார்.

**தனுசு:** சகோதரவகையில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். தந்தைவழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சியுடன் செலவுகளும் ஏற்படும்.

**மகரம்:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். தந்தைவழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும்.

**கும்பம்:** உடல்நலனில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன்வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மீனம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். ஆனால், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படக்கூடும். இளைய சகோதர வகையில் ஆதாயம் உண்டாகும்.




# லக்னோவை நம்பமுடியாத வகையில் விரட்டித் தோற்கடித்தது டெல்லி!

விசாகப்பட்டினம், மார்ச் 25

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், தாக்கம் செலுத்தும் வீரராகக் களமிறங்கிய அசுதோஷ் சர்மாவின் அசுரத்தனமான ஆட்டத்தால் லக்னோவைத் தோற்கடித்தது புது டெல்லி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற புதுடெல்லி களத்தடுப்பைத் தீர்மானித்தது. லக்னோ அணியின் ஆரம்ப வீரர்களாக மார்க்ரம் மற்றும் மிச்செல் மார்ஷ் இருவரும் களமிறங்கினார்கள். மார்க்ரம் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினாலும், மிச்செல் மார்ஷ் மற்றும் நிக்கொலஸ் பூரன் இருவரும் அதிரடி காட்டினார்கள். ஓவருக்கு பத்துக்கும் அதிகமான ஓட்டங்கள் என்ற சராசரியில் லக்னோவின் ஓட்டங்கள் எகிறிக் கொண்டிருந்தன. 11.4 ஓவர்களில் அணி 133 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், 72 ஓட்டங்களை மிச்செல் மார்;ஷ் பெற்றார். நிக்கோலஸ் பூரன் 30 பந்துகளில் 75 ஓட்டங்களைப் பெற்றார். லக்னோ அணி 8 விக்கெட்டுகளை இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றது.



பந்துவீச்சில் ஸ்ராக் 3 விக்கெட்டுகளையும், குல்தீப் யாதவ் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய டெல்லி அணி 7 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் இழந்து தடுமாறியது. டுபிளஸி, அக்சர் பட்டேல் இருவரும் இணைந்து அணியை மீட்டெடுக்க போராடிய போதிலும் முயற்சி வெற்றியளிக்கவில்லை. 29 ஓட்டங்களுடன்டுபிளஸியும், 22 ஓட்டங்களுடன் அக்சர் பட்டேலும் ஆட்டமிழந்தனர். தாக்கம் செலுத்தும் வீரர் என்ற விதியின் கீழ் களமிறக்கப்பட்டார் அசுதோஷ் சர்மா. களமிறங்கிய நிமிடம்முதல் அவர் அதிரடியான ஆட்டத்தைக் கையிலெடுத்தார். ஸ்ரப்ஸ் 34 ஓட்டங்களையும், விப்ராஜ் 39 ஓட்டங்களையும் பெற்று, இருவரும் இலக்கை எட்டக்கூடிய பங்களிப்பை வழங்கினார்கள். அணி 192 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது 9 விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டிருந்தன. சிக்சர், பவுண்டரி, சிக்சர் என அடுத்தடுத்து பறக்கவிட்டு ஒரு விக்கெட் வித்தியாசத்தில் அணியை வெற்றி பெற வைத்தார் அசுதோஷ் சர்மா. அவர் ஆட்டநாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார். (ம)






# பெண் முயற்சியாளர்களின் உள்ளூர் உற்பத்திக் கண்காட்சி

சர்வதேச மகளிர்தினத்தினை முன்னிட்டு யாழிசைக் கவித்தடாகம், சுன்னாகம் பொதுநூலகம் ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில், பெண்தலைமைத்துவ முயற்சியாளர்களின் உள்ளூர் உற்பத்திக் கண்காட்சியும் விற்பனையும் சுன்னாகம் பொதுநூலக வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது. கண்காட்சியில்வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் செயலாளர் அழகேஸ்வரன் பிரதீபன் கலந்துகொண்டு சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைத்தார். (சு-25,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

திறமை ஒரு பரிசு, ஆனால் கடின உழைப்பால் மட்டுமே உங்களால் வெற்றியடையமுடியும்.


– ஜீன் பெலிவோ–

# யதார்த்தமும் முரணும்!

இந்தியாவில் தங்கியுள்ள ஈழ அகதிகள் நாடு திரும்பவேண்டும் என்று அழைப்பு விடுத்திருக்கின்றார் வடக்கு ஆளுநர் வேதநாயகன். அவ்வாறு அவர்கள் நாடு திரும்பினால், தேவையான உதவிகள் வழங்கப்படும் என்றும், புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை இந்தியாவுடன் கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஆளுநர் கூறியிருக்கின்றார். அகதிகளாக இந்தியாவின் முகாம்களில் வசித்துவரும் ஈழத்தமிழர்கள் தாயகம் திரும்பவேண்டும் என்பதே பொதுவாக அனைவரினதும் எதிர்பார்ப்பாகக் காணப்படுகின்றது. ஆனால், அவ்வாறு அவர்கள் தாயகம் திரும்புவதில் உள்ள இடர்பாடுகளைப் புரிந்து கொள்வதும் மிகவும் அவசியமானது.

தமிழகத்தில் உள்ள ஈழ அகதிமுகாம்களில் தங்கிருந்த அகதிகளில் சிலர் இதற்கு முன்னர் தாயகம் திரும்பியிருக்கின்றனர். அவ்வாறு வருகைதந்தவர்களின் வாழ்க்கைத்தரம் எவ்வாறிருக்கின்றது? அவர்களுக்கு எத்தகைய வசதிகளும், வாய்ப்புகளும் இலங்கை அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன? என்ற கேள்விகள் இன்று எழுப்பவேண்டியது மிகவும் அவசியமானது. நேர்மையாகக் கூறவேண்டுமாயின், தமிழகத்தில் இருந்து இலங்கை திரும்பியவர்கள் உரிய ஆவணப் பற்றாக்குறைகளுடன்தான் இன்று அல்லாடிக்கொண்டிருக்கின்றனர் என்பதே யதார்த்தம். அரச சார்பற்ற நிறுவனங்களின் நடமாடும் சேவைகள் மூலம் ஒருசிலர் பிறப்புச்சான்றிதழ், திருமணச் சான்றிதழ் போன்ற அடிப்படை ஆவணங்களைப் பெற்றுக்கொண்டாலும், ஏனையோர் அந்த ஆவணங்கள் இல்லாமல் தமக்கான பல தேவைகளைப் பூர்த்திசெய்யமுடியாதவர்களாக, அரச உதவித்திட்டங்களில் புறக்கணிக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர். இலங்கைக்குத் திரும்பிவந்ததை விடவும், இந்திய அகதிமுகாமிலேயே இருந்திருக்கலாம் என்பதே அவர்களில் பலரின் இப்போதைய எண்ணவோட்டமாக இருக்கின்றது. நிதர்சனம் இவ்வாறிருக்கையில், எவ்வாறு ஈழ அகதிகள் தமிழகத்திலிருந்து மீண்டும் தாயகம் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கலாம்?

இலங்கையில் இருந்து தற்போதும் ஏராளமானவர்கள் ஏதிலிகளாக தமிழகத்துக்குச் சென்றுகொண்டிருக்கின்றனர். எல்லாவற்றுக்கும் மேல், தமிழகத்திலிருந்து இலங்கைக்குத் திரும்பியவர்கள், மீண்டும் இங்கிருந்து அங்கு சென்றுள்ள சம்பவங்களும் நிகழ்ந்திருக்கின்றன. இதற்கெல்லாம் காரணம் என்ன? தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழர்களை மீண்டும் தாயகம் கொண்டுவரவேண்டும் என்ற அரசின் நோக்கம் நல்லதுதான். அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஆனால், வெறும் வாய்ச்சவடால்களால் இதைச் சாதித்துவிடமுடியாது. இதயசுத்தியுடன் தூய்மையான நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டாலேயே இந்த மீள்குடியேற்றம் என்பது சாத்தியம். இலங்கையர்கள் சில தசாப்தங்களாக இந்தியாவில் தங்கியிருந்தாலும், அவர்களுக்கு இந்தியக் குடியுரிமையை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் இன்னும் எண்ணம்கொள்ளவில்லை. அப்படியிருந்தும் அவர்கள் இங்கு வருவதற்குத் தயங்குகின்றார்கள் என்றால், தமது மறுவருகையை அவர்கள் அசௌகரியமாக உணர்கின்றனர் என்றே அர்த்தம். அகதி வாழ்வை எவரும் தேர்ந்தெடுப்பதில்லை, அது எவருக்கும் விருப்பமும் அல்ல. இந்தியாவில் இருந்து மீளக் குடியேறிய மக்களுக்கு சிறந்த வீடுகளை வழங்கி, வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தி, 'இலங்கையர்கள்' என்ற தேசிய ஒருமைப்பாட்டில் ஜனநாயக உரிமைகளை தார்மீகக் கடமையுடன் வழங்கினால், இவ்வாறாக வலிந்து அழைக்கும் தேவை இலங்கை அரசுக்கு ஏற்பட்டிருக்காது. மக்கள் தாமாகவே முன்வந்து தமது சொந்த இடங்களில் குடியேறுவார்கள்.




# தேயிலை ஏற்றுமதி கடந்த மாதம் வீழ்ச்சி



கொழும்பு, மார்ச் 25

**இலங்கையின் தேயிலை ஏற்றுமதி கடந்த பெப்ரவரி மாதம் வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த பெப்ரவரி மாதத்தில் 20.40 மில்லியன் கிலோ தேயிலை மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.**

கடந்த ஜனவரி மாதம் மற்றும் பெப்ரவரி மாதத்தில் 39.77 மில்லியன் கிலோ தேயிலை ஏற்றுமதிசெய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது தேயிலை ஏற்றுமதி 1.30 மில்லியன் கிலோவால் வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் இலங்கையில் இருந்து ஈராக் அதிகளவு தேயிலையை இறக்குமதிசெய்துள்ளது.

அதற்கு அடுத்த இடங்களில் ரஷ்யா மற்றும் லிபியா என்பன உள்ளன. (எ-இ)

# வாகன இறக்குமதி தொடரும்

கொழும்பு, மார்ச் 25

பெப்ரவரி முதலாம் திகதி வாகன இறக்குமதித் தடை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து 207 மில்லியன் டொலர் பெறுமதியான வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். ஒரு பில்லியன் டொலர் பெறுமதியான வாகனங்களை இறக்குமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி, வாகன இறக்குமதி விவரங்கள் தினமும் மேற்பார்வை செய்யப்படுகின்றது என்றும், டொலர் இருப்பில் தாக்கம் ஏற்படாத வகையில் வாகனங்கள் இறக்குமதி செய்யப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (எ-33-6)

# தென்னைச் செய்கையாளர்களுக்கு இம்மாதம் உரமானியம்

கொழும்பு, மார்ச் 25

தென்னைச் செய்கையாளர்களுக்கு இந்தமாத இறுதிமுதல் உரமானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

5 ஏக்கருக்குக் குறைவான இடப்பரப்பில் தென்னைச் செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு உரமானியம் வழங்கத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இதற்காக 5 ஆயிரத்து 600 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், உரமானியம் வழங்குவதற்காக அரசாங்கத்திடம் 56 ஆயிரத்து 700 மெற்றிக்தொன் உரம் கையிருப்பில் உள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (எ-33-இ)

# ஆடை ஏற்றுமதி வளர்ச்சி

கொழும்பு, மார்ச் 25

இலங்கையின் ஆடை ஏற்றுமதி கடந்த பெப்ரவரி மாதத்தில் 2.3 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.

கடந்த ஆண்டின் இதேகாலப்பகுதியுடன் ஒப்பிடும்போது ஆடை ஏற்றுமதி 407.93 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆயினும் ஒன்றிணைந்த ஆடைக் கைத்தொழில் சங்கங்களின் ஒன்றியத்தின் தரவுகளின்படி, ஒட்டுமொத்த ஏற்றுமதி வளர்ச்சியடைந்துள்ளபோதும், அமெரிக்கா மற்றும் பிரிட்டன் போன்ற முக்கியமான சந்தைகளின் செயற்றிறன் சரிவைச் சந்தித்துள்ளது. (எ-இ)

# கே-8 ரக விமானங்களை ஆய்வு செய்யத் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 25

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான அனைத்து கே-8 ஜெட் விமானங்களும் ஆய்வுக்குட்படுத்தப்படும் என்று பாதுகாப்புப்பிரதி அமைச்சர் அருண ஜெயசேகர தெரிவித்துள்ளார். வாரியபொல, மேல் மினுவங்கேட்டின் வெலகெதரப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை விமானப்படையின் கே-8 ரகப் பயிற்சி விமானம் விபத்துக்குள்ளான நிலையில், பிரதி அமைச்சர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

இந்த விமான விபத்துத் தொடர்பாக 7 பேர் கொண்ட குழு விசாரணைகளை முன்னெடுத்துள்ளது. தேவை ஏற்பட்டால் வெளிநாட்டு ஆய்வுக்குழுக்கள் வரவழைக்கப்படும். (எ-25,இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்

17 . 10 . 1957



மறைவு

23 . 03 . 2025

## S.V.M( PVT) LTD கொழும்பு முகாமையாளர்
## நடேசலிங்கம் ஜெயக்குமார் அவர்களின்
## அன்புத் தாயார்

# நடேசலிங்கம் பரமேஸ்வரி

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

S.V.Murugesu
No: 154, Hospital Road, Jaffna.
S.V.M(Pvt)Ltd
No:122, Dam Street Colombo- 12.
.S.V.M Fuel Mart
No:173, 175, Palaly Road, Thirunelvely.
S.V.M Rice Mill
PowerHouse Road, Chunnakam.

உரிமையாளரும்
பணியாளர்களும்

(CR/44662) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BIDS
# MARITIMEPATTU - PRADESHIYA SABHA

1. The Chairman, Local Authority Procurement Committee and The Chairman, Divisional Procurement Committee on behalf of the Secretary, Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | | Document Issuing/Purchasing Period | | | | From 25.03.2025 until 07.04.2025 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Pre-Bid Conference | | | | At 10.30 A.M on 01.04.2025 | | | | |
| | | Closing and Opening of Bids | | | | At 10.30 A.M on 08.04.2025 | | | | |
| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security Amount (Rs.) | Required Bid Security Validity Period |
| 01 | NP/14/44(01)02/03/C.F/Capital/2025/01 | Renovation of Palmyra Murugan Kovil Link Road (Concrete) Balance work at Karikkaddu North, Renovation of Manatkudiyiruppu Light House 2nd Cross Road (Tar) at Mullai Town, Renovation of SilawaththaiTheeththakkarai Link Road (Tar) at mullaiyoor | Council Fund | 5.08 | 77 | C8or Above (Highway) | 3,000.00 | 23-Jun-2025 | 80,000.00 | 21-Jul-2025 |
| 02 | NP/14/44(01)02/03/C.F/Capital/2025/02 | Renoation(Concrete) of Mill Road at Kanukkerny west, Renovation (Tar) of chemmalai 1st Cross road at Chemmalai, Renovation (Tar &culvert) of Karadipooval Road | Council Fund | 5.08 | 77 | C8 or Above (Highway) | 3,000.00 | 23-Jun-2025 | 80,000.00 | 21-Jul-2025 |
| | | at Kumulamunai West | | | | | | | | |
| 03 | NP/14/44(01)02/03/C.F/Capital/2025/03 | Renovation (Tar) of Cemetery Road at Mulliyawalai East, Renovation (Tar) of Ruban Shop Near Road at Thanneeroottu east, Renovation (Concrete) of Housing scheme Road at Ponnagar | Council Fund | 5.08 | 77 | C8 or Above (Highway) | 3,000.00 | 23-Jun-2025 | 80,000.00 | 21-Jul-2025 |
| 04 | NP/14/44(01)02/03/C.F/Capital/2025/04 | Renovation (Tar) of Vattappalai VIP Road at Vattappalai, Renovation (Tar) of School Road at Neeravippiddy East | Council Fund | 3.38 | 77 | C9or Above (Highway) | 3,000.00 | 26-May 2025 | 50,000.00 | 23-Jun-2025 |
| 05 | NP/14/44(01)02/03/C.F/Capital/2025/05 | Burning Shed for Kokkilai East Hindu Cemetery at Kokkilai East | Council Fund | 1.27 | 49 | C9or Above (Building) | 1,000.00 | 26-May 2025 | 20,000.00 | 23-Jun-2025 |
| 06 | NP/14/44(01)02/03/DE.RE/Capital/2025/01 II | Mulliwaikkal Tourism Centre Fencing Balance Work at Mulliwaikkal | Council Fund | 1.05 | 49 | C9or Above (Building) | 1,000.00 | 26-May 2025 | 16,000.00 | 23-Jun-2025 |
| 07 | MA/NP/MU/MPPS/2025/LAR/01 | Renovation of UduppuklamMurippu Joint Road | PSDG (Maintenance) | 2.54 | 77 | C9or Above (Highway) | 3,000.00 | 26-May 2025 | 40,000.00 | 23-Jun-2025 |
| 08 | PSDG/NP/MU/MPPS/2025/LAR/02 | Construction of Barathy Home Road Stage II | PSDG | 5.93 | 77 | C8 or Above (Highway) | 3,000.00 | 23-Jun-2025 | 90,000.00 | 21-Jul-2025 |
| 09 | PSDG/NP/MU/MPPS/2025/LAR/03 | Construction of Peruntheru Road Stage III | PSDG | 1.69 | 49 | C9or Above (Highway) | 1,000.00 | 26-May 2025 | 25,000.00 | 23-Jun-2025 |
| 10 | PSDG/NP/MU/MPPS/2025/LAR/04 | Construction of Senkaddukerny Road | PSDG | 4.86 | 77 | C8 or Above (Highway) | 3,000.00 | 26-May 2025 | 75,000.00 | 23-Jun-2025 |
| 11 | PSDG/TOURISM/NP/MU/MPPS/2025/01 | Establishment of board docking area and landscaping at Sinnaaru Area | PSDG (Tourism) | 2.54 | 77 | C9orAbove (Building & Irrigation) | 3,000.00 | 26-May 2025 | 40,000.00 | 23-Jun-2025 |
| 12 | NP/14/44(01)02/03/Stamp | Poothanvajal Madawalasingam | Stamp Duty | 1.62 | 77 | C9or Above | 1,000.00 | 26-May | 25,000.00 | 23-Jun- |
| | Duty/2024/01 | Road Bridge Renovation | | | | (Highway) | | 2025 | | 2025 |

5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Maritimepattu - Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu (T.P:0212290001, email: pskpattu@gmail.com)from 9:00 hrs to 15:00 hrs during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate)S/No from 01 to 04must be delivered to the Chairman, Local authority Procurement Committee, Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu and Bids (Original & Duplicate)S/No from 05 to 07must be delivered to the Chairman, Divisional Procurement Committee, Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu on or before 02.30 P.M as stated in table above. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu
7. Pre-Bid Conference will be held at Conference Hall, Maritimepattu Pradeshiya Sabha, Kovilkudiyiruppu, Mullaitivu commencing at 10.30 AM as stated in table above.
8. All Bids must be accompanied by either Bid security as per the information given in the Tables.

Chairman
Local Authority Procurement Committee& Divisional Procurement Committee
Maritimepattu Pradeshiya Sabha,
Kovilkudiyiruppu, Mullaitivu.

25.03.2025

(CR/44660) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் காலத்துக்கு வலுவான பாதுகாப்பு

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் காலத்தில் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கும் வன்முறைச் சம்பவங்களைக் குறைப்பதற்கும் வலுவான பாதுகாப்பு நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் தேர்தல் பிரிவு, தேர்தல் சட்ட மீறல்கள் மற்றும் நாடு தழுவிய வன்முறை நடவடிக்கைகள் குறித்த அறிக்கைகளை தீவிரமாகக் கண்காணித்துவருகிறோம். அனைத்துச் சம்பவங்களும் பதிவுசெய்யப்படுகின்றன. எந்தவொரு மீறல்களுக் கும் எதிராக நாங்கள் உடனடி நடவடிக்கை எடுத்து வருகிறோம், தற்போதைய பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யும்போது சிறப்பு முன்னெச்சரிக்கைகள் செயற்படுத்தப்பட்டன.

தேர்தல் நாள் நெருங்கும் போது பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் கூடுதல் பாதுகாப்புக்கான பொலிஸ் குழுக்களை கடமையில் ஈடுபடுத்தத் தீர்மானித்துள் ளோம். கொழும்பில் வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதை மேற்பார்வையிடுவது உட்பட, தேர்தல் நடவடிக்கைகளைப் பாதுகாக்கும் பணியைப் பொலிஸார் முன்னெடுத்துவருகின்றார்கள். தேர்தல் காலத்தில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களைத் தடுப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ச-இ)

## வாடகைக்கு

Om Ram Express வான் சேவை
யாழ் கொழும்பு மற்றும் வெள்ளவத்தை
பம்பலப்பிட்டிய ஆகிய பிரதேசங்களில் நாள், கிழமை, மாதம் போன்றவற்றிக்கு
வீடு மற்றும் அறைகள் வாடகைக்கு உண்டு.
( வாடகை ரூபா - 3500/- தொடக்கம் )
077 792 8174
(CR/44661) K-1

## ஆசிரியர் தேவை

சிறு குழுக்களாக A/L மாணவர்களுக்கு மீடியா (media) பாடம் கற்பிப்பதற்கு ஆசிரியர் உடன் தேவை.
இடம் : பிரான் பற்றுவீதி. சங்கானை.
077 675 1649
(CS/57821) S-1

## விற்பனைக்கு/ வாடகைக்கு

- T.V, Fridge மற்றும் பல மின்சார உபரணங்கள் ,மோட்டார் சைக்கிள், மர தளபாடங்கள் என்பன விற்பனைக்கு உண்டு.
- கொக்குவிலில் வீடு வாடகைக்கு உண்டு.

076 833 7737
(CS/57823) K-1

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபாய்
நிலம் இழுத்து பதிக்க - 100 ரூபாய்
077 334 1281

# கலப்பையில் சிக்கி இளைஞர் பலி!

வயலில் உழுது கொண்டிருந்த உழவு இயந்திரத்திலிருந்து தவறிவிழுந்து சுழல்கலப்பையில் சிக்கி இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் அம்பாறைஅக்கரைப்பற்றுப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

16 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ச-இ)

## பெயர் மாற்றம்

அராலி கிழக்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த **முருகேசு கந்தையா** ஆகிய நான் எனது பெயரை **முருகேசு கந்தசாமி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **முருகேசு கந்தசாமி** எனவே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(CS/57819) K-1

**முருகேசு கந்தசாமி**

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

**வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாகக் குழுத் தெரிவும் 2025-2026**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகக் குழுத் தெரிவும் எதிர்வரும் 06.04.2025 ஞாயிற்றுக் கிழமை காலை 09.00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சபாலிங்கம் அரங்கத்தில் இடம்பெறவுள்ளது.

அனைத்து பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

24.03.2025 ப.சசிவர்ணன்/ செயலாளர்

மேலதிக விபரங்களிற்கு: www.jhcobajaffna.com

# பிணையில் வந்த யோஷித மீண்டும் சிக்கலில்!

## இரவு விடுதியில் தகராறு

கொழும்பு, மார்ச் 25

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மகன் யோஷித ராஜபக்சவும், அவரது மனைவியும் கொழும்பிலுள்ள விடுதிக்குச் சென்றிருந்தபோது அங்கு தகராறு ஏற்பட்டுள்ளது. அவர்களுடன் எட்டுப்பேர் வந்திருந்த நிலையில் அவர்களில் ஒருவருக்கு விடுதிக்குள் நுழையத் தேவையான கைப்பட்டை இல்லாததால் இந்தத் தகராறு ஏற்பட்டுள்ளது.

பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கைப்பட்டை குறித்து கேட்டபோது வாக்குவாதம் ஏற்பட்ட நிலையில். வந்த எட்டுப்பேரும் பாதுகாப்பு அதிகாரியைத் தாக்கியுள்ளனர்.

அப்போது யோஷித ராஜபக்சவும், அவரது மனைவியும் அந்த இடத்தை விட்டுச் சென்றுவிட்டனர். இந்தச் சம்பவம் குறித்து இரவு விடுதியின் உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு அளித்துள்ளார்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் குறித்த சகாக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். விரைவில் கைதுசெய்யப்படுவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை தாக்குதலுக்கு இலக்கான பாதுகாப்பு அதிகாரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார். (ச-இ)



உலக நீர் தினத்தை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை ஜே/152 மாதகல் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள சம்பில்துறை புனித சூசையப்பர் ஆண்டகை வளாகம், புனித சூசையப்பர் கடற்றொழிலாளர் அமைப்பு வளாகம் என்பன சிரமதானப் பணி மூலம் துப்புரவுசெய்யப்பட்டன. (ச-66)


## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த (26.02.2025) புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு

### அமரர் பாலசுந்தரி பத்மநாதன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (26.03.2025) புதன்கிழமை காலை 8.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று, 28.03.2025 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

214, பொன்னாலை வீதி,
கட்டுடை, மானிப்பாய்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 118 5105

(CS/57764) J-1

## மரண அறிவித்தல்



### அமரர் ஜோசப் சின்னத்துரை சபின்ஸ் ஜெயசேகரா

(TMS Computer Technology Engineer, Frankfurt Germany)

நெடுந்தீவைப் பிறப்பிடமாக கொண்டவரும் ஜெர்மனி பிராங்போர்ட், சிங்கப்பூரை வதிவிடமாகவும் யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சபின்ஸ் ஜெயசேகரா அவர்கள் கடந்த 21.03.2025 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசெப் சின்னத்துரை (ஆசிரியர், ஆயுள்வேத வைத்தியர்) - மேரி திரேஸ் அமிர்தம் (ஆசிரியர்), (நெடுந்தீவு மாவிலித்துறை புனித சவேரியார் ஆலயத்தின் மூப்பரும் பணியாளரும்) தம்பதியரின் மகனும், திரேசா (சிங்கப்பூர்) அவர்களின் அன்புக் கணவரும், நீல்ஸ் (கனடா), டியோனிஸ் (ஜெர்மனி), டிலோன் (ஜெர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான றூபி (லண்டண்), ஜெயமணி (லண்டன்), மற்றும் இராஜசூரியர் (நோர்வே), காலஞ்சென்றவர்களான ஜெயராசா (கொழும்பு), அருட்சகோதரி ஒலிவியா (திருக்குடும்ப சபை), மற்றும் ஜெயரட்ணம் (அவுஸ்ரேலியா), ஜெயபாக்கியம் (ஜெர்மனி), காலஞ்சென்ற ஜெயசீலன் (ஜெர்மனி), ஜெயமலர் (ஜெர்மனி), காலஞ்சென்ற ஜெயந்திரன் (ஜெர்மனி) ஜெனிற்றா (ஜெர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான அல்பிரெட், கனகரத்தினம், ஜெயராணி, மற்றும் பற்றிசியா, லெனிற்றா, காலஞ்சென்றவர்களான நடேசன், மங்கையர்கரசி, ஜெயந்திரா, மற்றும் இன்பராணி, யோகவதி, காலஞ்சென்ற செல்வரட்ணம், ஆகியோரின் மைத்துனரும், வசந்தி, சாந்தி, மோகன், வசந்தன், கேமாலினி, பிரேமாலினி, நிசாந்தன், வினோலினி, நிலோஜன், ஒஸ்மன், ஜோஸ்லின், ஸ்ரெவான் ஆகியோரின் மாமனாரும், றாகினி, றோகினி, ரஞ்சன், டயானி, ஜோய், ஜூன், ஜெனி, ஜெசி, ரெறென்ஸ், கிளறன்ஸ், பூர்ணிமா, சுதர்ணிமா, தர்சிணிமா, கிருஸ்ணிமா, பிறியணிமா, ரெமிஸ்ரன், தயான், பிரியா, கமிலஸ், ஆகியோரின் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.03.2025) செவ்வாய்க்கிழமை மாலை 4.00 - 7.00 மணிவரை அஞ்சலிக்காக இல.180 பிரதான வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள White House Funeral Parlour இல் வைக்கப்படும்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை (26.03.2025) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு றக்கா வீதியில் அமைந்துள்ள புனித திரேசம்மாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின் நெடுந்தீவுக்கு எடுத்து செல்லப்பட்டு புனித சவேரியார் ஆலயத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நெடுந்தீவு கிழக்கிலுள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இராஜசூரியர் - சகோதரன் :+94 761677160
ஜெயரட்ணம் - சகோதரன் :+61 412882645
ஜெயபாக்கியம் - சகோதரி :+49 17624203582
ஜெயமலர் - சகோதரி :+49 1773916802
ஜெனிற்றா - சகோதரி : +49 15730766934

தகவல்:
குடும்பத்தினர்

(CS/2801) J-1

## 3ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
09 . 06 . 1948



மறைவு
28 . 03 . 2022

### சண்முகநாதன் சிவராஜா (சிவதாஸ்)

திதி: 25.03.2025

அன்பிற்கு இலக்கணமாய் வந்துதித்த அப்பா !
உங்கள் பாசமான முகம் பார்த்து மூன்று வருடங்கள் ஆனதே
உங்கள் முகம் காண பரிதவித்து நிற்கின்றோம்
உங்கள் புன்னகை பூத்த முகம்
எங்கள் நினைவில் என்றுமே மறையாது
நாம் வாழும் காலம் வரை எங்கள் இதயங்களில்
வாழ்ந்து கொண்டுதான் இருப்பீர்கள் அப்பா !
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

50/19, செட்டித்தெரு,
நல்லூர்.

(CS/57741) J-1


பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 06 . 10 . 1945

மறைவு 25 . 02 . 2025



கடந்த 25.02.2025 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் சிவசம்பு நடராஜா

(ஓய்வு பெற்ற முகாமையாளர் அரச மரக்கூட்டுத்தாபனம்-யாழ்ப்பாணம்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (25.03.2025) செவ்வாய்க்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனிததீர்த்தக் கரையிலும்,வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை மறுதினம் (27.03.2025)வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கே.கே.எஸ் றோட்,
உடுவில் கிழக்குத், சுன்னாகம்.

(CS/57822) S-1

குடும்பத்தினர்.

# விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 25

வாசுகி அறநோக்கு மழலையர் பள்ளியின் 11ஆவது ஆண்டு விளையாட்டு விழா எதிர்வரும் மே மாதம் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெற வுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் இளைப்பாறிய முதுநிலை விரிவுரையாளரும், முன்னாள் இளைப்பாளருமான கலாநிதி கந்தையா சிவராஜா கலந்துகொள்ளவுள்ளனர் என்று நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ஏ-41)

# மரண அறிவித்தல்

## விஜயநாதன் தங்கமுத்து

மலர்வு 07.04.1937 உதிர்வு 22.03.2025



யாழ் உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், சுவிட்சர்லாந்து சூரிச்சை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயநாதன் தங்கமுத்து அவர்கள் கடந்த (22.03.2025) சனிக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - செல்லாச்சி தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - இராசம்மா தம்பதியின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வைத்தில்ங்கம், விஜயநாதன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களன சந்திரசேகரம், இரத்தினம், செல்லமுத்து, வேலுப்பிள்ளை மற்றும் தேவரட்னம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயகுமார் (UK), இரட்ணகுமார் (சுவிஸ்), ஜெயக்குமாரி (UK), உதயகுமாரி (கனடா), வனஜகுமாரி (UK) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுபத்திரா (UK), புனிதமலர் (சுவிஸ்), சிவக்குமார் (UK), காலஞ்சென்ற மனோகரன் மற்றும் கேசவன் (UK) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 25.03.2025 மற்றும் நாளை 26.03.2025 ஆகியதினங்களில் 10.am - 4.30 Pm வரை Kramatorium Nordheim, Kaferholzstrasse 101, 8046 Zurich. (Bucheggplatz) என்னும் இடத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டு.

இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (27.03.2025) வியாழக்கிழமை 9.00 am - 12.00 pm மணியளவில்Zurich இல் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக Kramatorium Nordheim, Kaferholzstrasse 101, 8046 Zurich. (Bucheggplatz) இடத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

V.Ratnakumar
Friedh of nordheim
8037 Zurich, Switzerland.

தகவல் : செல்வநாயகி, இரவீந்திரகுமார்
077 978 4226
(பெறாமகள்-உடுப்பிட்டி)

(CR/29623) J-1

# மரண அறிவித்தல்



## திரு இரத்தினம் சிவானந்தராஜா (சிவா)

நீர்வேலி வடக்கு நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Wupertal ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் சிவானந்தராஜா அவர்கள் (22.03.2025) சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் (சிவபாதம்)-பொன்னம்மா (ஆசிரியை) தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்ற வர்களான சின்னத்துரை-இராசம்மா தம்பதியின் அன்பு மருமகனும் சற்குமாரி (சுதா) அவர்களின் அன்புக் கணவரும் பவித்திரன் தழிழ்ப்பிரியன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் யதுஷா அவர்களின் பாசமிகு மாமனாரும் மாலா (ஆசிரியை), அகிலா (ஆசிரியை), நித்திலா (சுவிஸ்), கிருபானந்தன் (சுவிஸ்), பவாநந்தன் (லண்டன்), கசிகலா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மகேந்திரன் சந்திரசேகரம் காலஞ்சென்ற கருணாநிதி மற்றும் அநுராதா (சுவிஸ்), கிரிஜா (லண்டன்), வசீதரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (27.03.2025) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் Theoder- Fontane-Strabe Wuppental Germany இல் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

சிறுப்பிட்டி வடக்கு
நீர்வேலி.

மாலா : 077 367 5681
அகிலா : 077 260 2858
கசிகலா : 077 1951934

தகவல்:
குடும்பத்தினர்

(CS/57900) V-1

# மரண அறிவித்தல்

பிறப்பு 30 . 03 . 1965

இறப்பு 24 . 03 . 2025



## திருமதி காஞ்சனமாலை பத்மராஜா (காஞ்சனா)

யாழ். வண்ணார்பண்ணை பேச்சியம்மன் கோவிலடியை பிறப்பிடமாகவும் யாழ். வண்ணார்பண்ணை கேசாவில் பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காஞ்சனமாலை பத்மராஜா (காஞ்சனா) அவர்கள் 24.03.2025 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் செல்லம்மா தம்பதியின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற சௌந்தரராஜா-கண்மணி தம்பதியின் மருமகளும் காலஞ்சென்ற பத்மராஜா அவர்களின் அன்பு மனைவியும் றோக்சன், றொசானி, பிரதீபன் அவர்களின் அன்புத் தாயும் நவலட்சணா, ஜெயக்குமார், தட்சாயினி ஆகியோரின் பாசமிகு மாமியும் அதிதி, ஆதித்யன் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் நிகிதனின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.03.2025) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


41 கேசாவில் பிள்ளையார் கோவில்
வீதி வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்

றோக்சன் - மகன் Sri Lanka +94 (77) 741 7193
London - +44 7365530896
பிரதீபன் - மகன் Swiss - +41 76 400 44 94
அருள்குமார் +94 (77) 251 6540

தகவல்:
குடும்பத்தினர்

(CS 55794) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முச்சக்கரவண்டி விபத்தில் தந்தையும், மகனும் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

நேற்றுக்காலை பொன்னாலைப் பாலத்தில் கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கரவண்டி விபத்துக்குள்ளானதில் தந்தையும், மகனும் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காரைநகரில் இருந்து பொன்னாலைப் பாலம் ஊடாகப் பயணம்செய்த முச்சக்கரவண்டி கட்டுப்பாட்டை இழந்து வீதியைவிட்டுவிலகிக் கடலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. அதில் பயணித்த தந்தையும், மகனும் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்று சம்பவ இடத்தில் இருந்தவர்கள் தெரிவித்தனர். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-27)

### யாழ்ப்பாணத்தில் அதிகரிக்கும்

# இணையவழி மோசடியில் சிக்குவதைத் தவிருங்கள்!

யாழ்ப்பாணம், மார்ச் 25

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இணையவழியிலான மோசடிகள் அதிகரித்துள்ள நிலையில், பொதுமக்கள் அவை தொடர்பில் அவதானத்துடன் செயற்படவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.**

இணையச்செயலி ஒன்றின் ஊடாக முதலீடு செய்ய ஆசைகாட்டப்பட்டு பணம் மோசடிசெய்யப்பட்ட சம்பவங்கள் அண்மைக்காலங்களில் அதிகம் நடந்துள்ளன.

இந்தச் செயலி ஊடாக முதலிடும் போது சிறிய தொகை கொடுப்பனவாக மீளவழங்கப்படுகின்றது. பின்னர்பெரியதொகைமுதலிடும்போது அந்தத் தொகை அபகரிக்கப்பட்டுள்ளது என்று பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் மட்டும் அண்மைய நாள்களில் இவ்வாறான நான்கு மோசடிச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அதேநேரம், வங்கிக்கணக்குகளில் உள்ள பணம் மோசடி செய்யப்படும் சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இவ்வாறான மோசடிச் சம்பவங்கள் தொடர்பில் மக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும் என்றும், அறிமுகமில்லாதவர்கள் தொலைபேசி ஊடாக வங்கிக்கணக்கு இரகசிய இலக்கம், வங்கிக் கணக்கிலக்கம், அடையாள அட்டை இலக்கம், கடவுச்சொல் என்பவற்றைக் கோரினால் அவற்றை வழங்கக்கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் இந்த மோசடிச் சம்பவங்கள் தொடர்பான வழக்குகளும் நடைபெற்றுவரும் நிலையில், இந்த மோசடிச் சம்பவங்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று ஊர்காவற்றுறை நீதிமன்றம் பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளது. (எ-27)

# வவுனியாவில் காசநோயால் கடந்தாண்டு 9 பேர் மரணம்!

வவுனியா, மார்ச் 25

காசநோயால் வவுனியாவில் கடந்த ஆண்டு 9 பேர் இறந்துள்ளனர். 56 பேர் நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். முறையான சிகிச்சையின் மூலம் காசநோயை முற்றாகக் குணப்படுத்தமுடியும் என்று வவுனியா மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் மருத்துவ அதிகாரி கே.சந்திரகுமார் தெரிவித்துள்ளார். வவுனியாவில் நேற்றுத் திங்கட்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- தொடர்ச்சியாக இரு வாரங்களுக்கு மேற்பட்ட இருமல், மாலை நேரத்தில் காய்ச்சல், உணவில் நாட்டம் இன்மை, உடல்நிறை குறைவடைதல், சளியுடன் இரத்தம் வெளியேறல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் அது காசநோயாக இருக்கலாம். இந்த அறிகுறிகள் இருந்தால் அருகில் உள்ள பொது மருத்துவமனைக்குச் சென்று சாதாரண சளிப்பரிசோதனையை இலவசமாகச் செய்வதன் ஊடாக நோயை இனங்காணலாம்.

எந்தவித அறிகுறிகள் இல்லாமலும் இந்த நோய் உடலில் இருக்கலாம். ஏற்கனவே நோய் ஏற்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள், அல்லது நாள்பட்ட நோய்கொண்டவர்கள், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள், சிறுநீரக நோயாளர்கள் போன்றவர்களுக்கு அறிகுறிகள் வெளிப்படாமல் இந்த நோய்க்கிருமி தங்கக்கூடும். அவ்வாறானவர்களுக்கு பரிசோதனை மூலம் நோயைக் கண்டறியமுடியும்.

காசநோய் ஏற்பட்ட ஒருவர் 6 மாதங்களுக்கு நேரடிக் கண்காணிப்புடனான சிகிச்சையின் மூலம் மருந்துகளைப் பெற்றுக்கொண்டால் அதை முற்றாகக் குணப்படுத்தலாம்.

சிகிச்சை எடுக்கத்தவறினால் அது தீவிரமடைந்து இறப்புக்கு வழிவகுக்கும் - என்றார். (எ-25,110)

## மரண அறிவித்தல்

தோற்றம்
13 . 12 . 1946



மறைவு
24 . 03 . 2025

### அமரர் தனலட்சுமி குகநேசன்

வட்டுக்கிழக்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தனலட்சுமி குகநேசன் அவர்கள் (24.03.2025) திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் (சட்டத்தரணி) பொன்னம்மா தம்பதியின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான சிவசிதம்பரம் (தெய்வேந்திரம்/செட்டியார்) அன்னமுத்து தம்பதியின் மருமகளும் அமரர் குகநேசன் (முன்னாள் பங்குதாரர் செட்டியார் கடை, முன்னாள் நிர்வாகஸ்தர், பொருளாளர் வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் கந்தசுவாமி கோவில்) அவர்களின் பாசமிகு மனைவியும் அச்சுதன் (பாதுகாப்பு உத்தியோகத்தர் இலங்கை வங்கி காரைநகர்) குகதாசன் (ஆசிரியர், யா/ அராலி இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன், கனகநாயகம், தையல்நாயகி மற்றும் வைத்தியநடன், சிவகுமார், சிவனேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் மீனாம்பாள், சிவலோகநாதன், இராசேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் நாகேஸ்வரி (ஆசிரியர் யா/காரை சுப்பிரமணியவித்தியசாலை), பாமதி (ஆசிரியர், யா/அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் வராகன், வாணிஷா, ஆருஷ், ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 8.30 மணியளவில் மாதாங்கோவிலடி அராலியிலுள்ள அன்னாரின் மகனின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக நவாலி வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 670 1126, 077 172 7868

# வாழைகளைத்தாக்கும் பச்சை நோய் தீவிரம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ்ப்பாணத்தில் வாழைமரங்கள் ஒருவித பச்சை நோய்த் தொற்றுக்குள்ளாகின்றன என்றும் வாழை இலையில் ஏற்படும் ஒட்டும் தன்மையுடைய பசையால் வாழைமரங்கள் பாதிக்கப்படுகின்றன என்றும் செய்கையாளர்கள் கூறுகின்றனர்.

அதேநேரம், தென்னை மரங்களில் பரவிக் காணப்படும் வெள்ளை ஈக்களின் தொற்று வாழைமரங்களுக்கும் பரவியுள்ளது. இதனால் உணவு பரிமாறத் தேவைப்படும் வாழை இலைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. நோய் இனங்காணப்படும் வாழை இலைகளை வெட்டி அகற்ற வேண்டியிருக்கின்றது என்று செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-25,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்டார்லிங்...

இடைநிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.
நாட்டின் பாதுகாப்பு மற்றும் அரச நிறுவனங்களின் தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்பு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டே இந்தத் திட்டத்தை இடைநிறுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்று தெரியவருகின்றது.
'ஸ்டார்லிங்' இணைய சேவையால், தரவுப் பாதுகாப்புக்கான உத்தரவாதம் உறுதி செய்யப்படும்வரை, இணைய சேவையை நாட்டில் நடைமுறைப்படுத்த புதிய அரசாங்கம் அனுமதி வழக்காது என டிஜிட்டல் துறையின் பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார். (அ-ம-இ)

## மன்னார்,...

பட்டுள்ளது. நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாக மன்னார், பூநகரி மற்றும் தெஹியத்தகண்டிய பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வது தாமதமானமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## ஒரு...

குறித்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால், கட்டுப்பாட்டு விலையை மீறிய வகையில் அரிசி விற்பனை செய்யப்படுவதாக பாவனையாளர் அதிகார சபைக்கு தொடர்ச்சியாக முறைப்பாடுகள் வழங்கப்பட்டுவந்தன. இந்த முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்கையின்போது, கட்டுப்பாட்டு விலையை மீறிய வகையில் அரிசி விற்பனை செய்தமை உறுதிப்படுத்தப்பட்டது.
இதையடுத்து, பாவனையாளர் அதிகார சபையால் கடந்த வருடத்தின் இறுதியில் அந்தப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.
இந்த வழக்கின் விசாரணைகள் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் இடம்பெற்றுவந்தன. வழக்கின் மீதான தீர்ப்பு பதில் நீதிவான் ஷாலினி ஜெயபாலசந்திரனால் வழங்கப்பட்டது. இதன்போதே, தொடர்புடைய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு ஒரு லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. தண்டப்பணத்தை குறித்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் உடனடியாகவே செலுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## ஓட்டோ...

என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
10 மாதக் குழந்தையுடன் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த அவரை, ஓட்டோவொன்று மோதிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது. இதன்போது படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்தார்.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். (அ-ம-26)

## வவுனியா...

இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.
சந்தேகத்துக்கு இடமான வாகனங்கள், குடியிருப்புப் பகுதிகள், குற்றவாளிகள் மறைந்திருக்கலாம் என்று கருதப்படும் இடங்கள் இதன்போது சோதனையிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-110)

## தேர்தல்...

நேற்று இடம்பெற்றது. இதன்போது, உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் உட்பட பல வேட்பாளர்கள் கலந்துகொண்டனர். இந்த விடயம் தேர்தல் திணைக்களத்தின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்ட நிலையில், வேட்பாளர்களை வெளியேற்றுமாறு தேர்தல் திணைக்களத்தால் உடனடியாக உத்தரவிடப்பட்டது.
எனினும், நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, அவர்களை வெளியேற்றக் கூடாது என்று குறிப்பிட்டார். 'அவர்களை வெளியேற்றுவதாக இருந்தால், எதற்காக அழைப்பு விடுத்தீர்கள்?' என்றும் ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரை வினவினார். ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட வேட்பாளர்களும், இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினார்கள். இதையடுத்து அவர்களை வெளியேற்றாமலேயே கூட்டம் நடைபெற்று முடிந்தது. எனினும், வேட்பாளர்களில் ஒருவர் தானாக முன்வந்து வெளியேறினார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

## சிங்களக்...

டும் என்று பொதுஜன பெரமுனவின் முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர வலியுறுத்தினார்.
பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போது அவர் இவ்வாறு கூறினார். மேலும் தெரிவித்ததாவது:-
'வடக்கில் விகாரை மற்றும் இராணுவத்திடம் நிறைய இடங்கள் உள்ளன. அவை மக்களிடம் ஒப்படைக்கப்படும் என்று புத்தசாசன அமைச்சர் தெரிவித்துள்ளார். போருக்குப் பின்னர் பொறுப்பேற்ற காணிகளில் 95 சதவீதம் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே, அது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கவேண்டியதில்லை. அதற்கான முயற்சியில் ஈடுபடுவது காலத்தை வீணடிக்கும் செயலாகும்.
1983ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிங்களக் குடும்பங்களும், 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்களும் வாழ்ந்தன. அவர்களின் இடங்கள் எங்கே? தமிழ் வாக்காளர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் அறிவிப்புகளை புத்தசாசன அமைச்சர் வெளியிட்டால் பரவாயில்லை.
தேசிய நல்லிணக்கம் மற்றும் சமத்துவம் பற்றி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றால், வடக்கில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட சிங்கள, முஸ்லிம் மக்களை மீள்குடியமர்த்தி, அவர்களுக்குரிய இடங்களை வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்குமாறு புத்தசாசன அமைச்சரிடம் கோருகிறோம் - என்றார். (அ-ம-44)

## கம்மன்பில...

பயன்படுத்தி விற்பனை செய்து 21 மில்லியன் ரூபா மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருந்து முன்னாள் அமைச்சர் கம்மன்பில விடுவிக்கப்பட்டுள்ளார்.
இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே, முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில மற்றும் வர்த்தகர் ஜயசிங்க ஆகியோரை குறித்த குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
உதய கம்மன்பில மற்றும் வர்த்தகர் ஜயசிங்க ஆகியோருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை, போதுமான சாட்சியங்களின் அடிப்படையில் சந்தேகத்துக்கு அப்பாற்பட்டு நிரூபிப்பதற்கு அரச தரப்பு தவறியுள்ளதால், அவர்கள் வழக்கிலிருந்து முற்றாக விடுவிக்கப்படுகின்றனர் என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது. (அ-ம-இ)

## திஸ்ஸ...

தமிழ் இனவாத வன்முறைக் கும்பலின் போராட்டத்தையடுத்து திஸ்ஸ விகாரையிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவதற்கு உத்தரவிட்டது யார்? வடக்கு பிரிவினைவாதிகளிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதா? என்று முன்னாள் அமைச்சர் வீரசேகர கேள்வி எழுப்பியுள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
காங்கேசன்துறையில் வரலாற்றுச் சிறப்புமிக்க திஸ்ஸ விகாரையில் புண்ணிய நிகழ்வொன்று நேற்று (நேற்று முன்தினம்) நடைபெற்றது. புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விகாரையைத் திறக்கும் நிகழ்வே அதுவாகும். 29 தேரர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.
இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் முதல் இந்தப் புண்ணிய காரியத்தில் ஈடுபட்டனர். பாரம்பரிய நாட்டியக் கலைஞர்கள் வருகைதந்திருந்தனர். இப்படி ஏற்பாடுகள் எல்லாம் இடம்பெற்றிருக்கையில், நிகழ்வை நிறுத்துமாறு வலியுறுத்தி காலை 7 மணியளவில் தமிழ் இனவாத வன்முறைக் கும்பலொன்று போராட்டத்தில் ஈடுபட்டது.
இதனையடுத்து இராணுவத்தினரை விகாரையில் இருந்து செல்லுமாறு மேல் மட்டத்திலிருந்து பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. இதனால் இராணுவத்தினர் வெளியேறினர். பெரஹெர மாத்திரமே இடம்பெற்றது. தேரர்களுக்கு உணவும் வழங்கமுடியாமற்போனது.
இந்த உத்தரவை வழங்கியது யார்? ஜனாதிபதியா?, பிரதி பாதுகாப்பு அமைச்சரா?, பாதுகாப்புச் செயலாளரா?, இராணுவத் தளபதியா? அல்லது பிரபாகரனின் அவதாரமா? எனக் கேட்கின்றோம்.
பௌத்த நாட்டில் வடக்கில் விகாரையொன்றில் புண்ணிய நிகழ்வொன்றை நடத்துவதற்கு வன்முறைக் கும்பல் இடமளிக்க மறுக்கின்றதெனில், நாட்டில் தேசியப் பாதுகாப்பு எந்த நிலையில் உள்ளது? இந்தக் குழுவுக்கு பயந்து நிகழ்வை நிறுத்தியது கோழைத்தனமாகும் - என்றார். (அ-ம-44)

## பெண்கள்,...

பொலிஸார் திட்டவட்டமாக மறுத்துள்ளனர்.
நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், சட்டவிரோதமாக மாடு ஒன்றை இறைச்சியாக்கிய விசாரணைகளுக்காக பொலிஸார் சென்றுள்ளனர். இதன்போதே, அவர்கள் தம்மைத் தாக்கினார்கள் என்று அந்த வீட்டில் இருந்தவர்கள் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர்.
எனினும், இந்தத் தகவல்களை பொலிஸார் திட்டவட்டமாக மறுத்துள்ளனர்.
'நாங்கள் எவரையும் தாக்கவில்லை. சட்டவிரோதமாக மாட்டை இறைச்சியாக்கிய நபர் வீட்டுக்குள் மறைந்திருந்தார். அவரைக் கைதுசெய்ய முற்பட்டபோது அந்த வீட்டிலிருந்த பெண்கள் கடமைக்கு இடையூறு விளைவித்தனர். சந்தேகநபரைக் கைதுசெய்வதற்காக வீட்டின் கதவையே உதைத்தோம். ஆனால் நாங்கள் எவரையும் தாக்கவில்லை' என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-26)

## போர்க்...

முன்னாள் இராணுவத் தளபதிகளான சவேந்திர சில்வா மற்றும் ஜகத் ஜெயசூரிய, முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட, விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்துசென்ற கருணா என்னும் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோருக்கு எதிராகவே இந்தத் தடைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
இது தொடர்பில் பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்ததாவது:
இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் போது சட்டவிரோதப் படுகொலைகள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் உட்பட மனித உரிமை மீறல்கள் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டமைக்காகவே இந்த நால்வருக்கும் எதிராக பிரிட்டன் தடைகளை அறிவித்துள்ளது.
இலங்கையில் இடம்பெற்ற பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு எதிராகப் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதும், தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படும் கலாசாரத்தை தடுப்பதும்தான் இந்தத் தடைகளின் பிரதான நோக்கம்.
இலங்கையின் புதிய அரசாங்கத்துடன் மனித உரிமைகள் விடயத்தில் இணைந்து பணியாற்றுவது குறித்து பிரிட்டன் அர்ப்பணிப்புடன் உள்ளது. தேசிய ஐக்கியம் தொடர்பான அவர்களின் அர்ப்பணிப்பை பிரிட்டன் வரவேற்கின்றது - என்றுள்ளது. (அ-ம-6)

## வடக்கு,...

கள் ஆதரிப்பார்கள் என்று ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.
ஊடகமொன்றுக்கு நேற்று வழங்கிய நேர்காணலில் ரில்வின் சில்வா இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
'பொதுத்தேர்தலின்போது 22 தேர்தல் மாவட்டங்களில் 21 தேர்தல் மாவட்டங்களை நாங்கள் கைப்பற்றினோம். மட்டக்களப்பு மாவட்டத்தை மட்டுமே கைப்பற்ற முடியவில்லை. யாழ்ப்பாணம் உட்பட வடக்கில் அனைத்து மாவட்டங்களிலும் வெற்றிபெற்றோம்.
கடந்த பொதுத்தேர்தலின்போது எமக்கு வாக்களித்துவிட்டு, இம்முறை மக்கள் வாக்களிக்காமல் தவிர்க்க எவ்விதக் காரணமும் இல்லை. மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிவருகிறோம். எனவே, பொதுத்தேர்தலின்போது எமக்கு வாக்களிக்காதவர்களும் இம்முறை வாக்களிப்பார்கள். சிறப்பான அணியைக் களமிறக்கியுள்ளோம்.
கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அனைத்துச் சபைகளுக்கும் நாம் போட்டியிடமுடியாத சூழ்நிலை இருந்தது. இம்முறை அனைத்துச் சபைகளுக்கும் போட்டியிடுகிறோம். இதுகூட ஆரம்பக்கட்ட வெற்றியே' - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழ் - காரைநகர் வீதியில் தனியார் பஸ்கள் 'ரேஸ்'!

## வீதியில் சிதறி ஓடிய மக்கள்

**யாழ்ப்பாணம், மார்ச் 25**

யாழ்ப்பாணம் காரைநகர் வீதியில் தனியார் பஸ்கள் போட்டிபோட்டு ஆபத்தாகப் பயணிப்பதால் வீதியில் செல்லமுடியாத நிலைமை காணப்படுகின்றது என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கீரிமலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸும், காரைநகரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸும் போட்டிபோட்டு வீதியில் ஆபத்தான வகையில் பயணித்தது பொதுமக்களை அச்சமடையச் செய்தது என்று தெரிவிக்கப்படுகின்றது. மானிப்பாய் கட்டுடைப் பகுதியில் பஸ்களுக்கு இடையே ஆரம்பித்த போட்டி ஆறுகால்மடம்வரை தொடர்ந்துள்ளது. இந்தப் போட்டியால் இரு பஸ்களும் பல பயணிகளை ஏற்றாது சென்றன என்றும் கூறப்படுகின்றது. (எ-25,27)



# சட்டவிரோத மணல் வர்த்தகம் தருமபுரத்தில் ஒருவர் கைது!

**கிளிநொச்சி, மார்ச் 25**

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உழவனூர் மற்றும் கல்லாறுப் பகுதிகளில் சட்டவிரோத மணல்யார் நடத்திவந்த நபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான நடவடிக்கையில் பொலிஸாரால் 28 கியூப் மணல் கைப்பற்றப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளும் நடவடிக்கைகளும் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-113)

**விற்பனைக்கு**

வவுனியாவில் வீட்டில் பாவித்த பொருட்கள் விற்பனைக்கு உண்டு
A / C, Fridge, T.V, Printer, Cupboard, Bed மற்றும் பொருட்கள்

தொடர்பு:077 923 0640

**உணவு ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு
- உணவு பரிமாறுபவர்
- Juice Maker
- Rotti போடுபவர்

தொடர்பு:077 407 8235

**வேலையாள் தேவை**

கல்வியங்காட்டில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு
- கொத்து
- பரோட்டா போடுபவர்கள்,
- உணவு விநியோகஸ்தர்கள் தேவை.

தங்குமிட வசதியும் உண்டு.

076 982 7517

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு.பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

(CS/57780) J-1

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

# மரண அறிவித்தல்



தோற்றம் 28 . 10 . 1929 — மறைவு 21 . 03 . 2025

## கந்தையா நவரத்தினம்மா

( ஓய்வு பெற்ற கணித பாட ஆசிரியை -உடுப்பிட்டி, அ.மி ஆண்கள் பாடசாலை, உடுப்பிட்டி மகளிர் பாடசாலை, மூதூர் மத்திய மகாவித்தியாலயம், அச்சுவேலி மகாவித்தியாலயம், திருமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி )

நவிண்டில் கரணவாய் வடக்கு கரவெட்டியை பிறப்பிடமாகவும் கதிரிப்பாய் அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா நவரத்தினம்மா அவர்கள் (21.03.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் - வள்ளியம்மை தம்பதியின் பாசமிகு கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - மீனாட்சி தம்பதியின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையா (SPHI) அவர்களின் அன்பு மனைவியும், வசந்தா . வனஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரவிசங்கர், திருக்குமார் ஆகியோரின் மாமியாரும், துவாரகா, ஆஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (26.03.2025) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கதிரிப்பாய் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கதிரிப்பாய்,
அச்சுவேலி.

தகவல்
குடும்பத்தினர்
077 686 9514

(CS/57816) சு-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 07 . 12 . 1949 — மறைவு 24 . 03 . 2025

## செல்லையா கிட்னேஸ்வரன்

(உள்ளக கணக்காய்வு அதிகாரி இலங்கை போக்குவரத்துச் சபை)

தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு செல்லையா கிட்னேஸ்வரன் அவர்கள் நேற்று (24.03.2025) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-செல்லாச்சி தம்பதியாரின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன், தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், விமலேஸ்வரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி, இராஜநாதன், சிவபாதசுந்தரம், புவனேஸ்வரி, தங்கராசா மற்றும் மகேஸ்வரன் (கனடா), ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் முகுந்தினி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கோண்டாவில்), கஜாநந்தா (Senior Quantity Surveyor Australia) டயனி, சர்மியா (இலங்கைவங்கி நல்லூர் கிளை) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் விக்னேஸ்வரன் (வர்த்தகர்), சசிகலா (அவுஸ்ரேலியா), கேதீஸ்வரன் (பிரதிநூலகர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), அஜந்தன் (இலங்கை வங்கி, வடமாகாண காரியாலயம் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சகானா, சாகித்தியா, கபிலன், லக்ஷியா, கரிஜன், ரிஷானி, பிரஜன், ரெஷ்மிதா, கவின்மில்லர் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.03.2025) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 12.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி

தகவல்: குடும்பத்தினர்
077 783 4603

(CS 2807) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.